
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*
கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V*.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P*.பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

### இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

## முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்"பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# திருக்குறளில் வாய்மையில் சமரசம்
# *Thirukkuralil vaaimayil samarasam*

முனைவர் து. சிவசித்ரா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு),
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி)
பசுமலை, மதுரை – 04.
Orcid ID: org/0000.002-8343-524x

**ஆய்வுச்சுருக்கம்:**

திருக்குறள் தோன்றிய காலத்தில் இருந்த சமுதாயத்தை கொள்கை வரையறுக்கப்பட்ட சமுதாயம் என்று குறிப்பிடலாம். ஏனெனில் இந்நூல் வாழ்வின் நன்மை தீமைகளை இனம் கண்டு பலராலும், குறிப்பாக கற்றறிந்தவர்கள், செல்வந்தர்கள், மேல்தட்டு மக்கள், விவசாயிகள் எனப் பலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாழ்க்கை நெறிமுறைகளை வகுத்துள்ளது. இதைத் தொடர்ந்து, சமூகப் பொருத்தமான ஒழுக்கங்கள், நடத்தைகள் மற்றும் சட்ட அமைப்புகளாக ஒழுக்கம் தொடர்பான வழிமுறைகளை முன்னிலைப்படுத்திய இக்காலத்தில் தோன்றிய அறநெறி நூல்களின் எண்ணிக்கையை எண்ணலாம்.அவ்வகையில் திருக்குறளில் வாய்மையில் சமரசம் என்னும் பார்வையில் ஆராயப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:**

ஒழுக்கம், நெறிமுறை, குறிப்பாக, சமூகம், , நடத்தை, அறநெறி

**Abstract:**

*The society that existed at the time of Thirukkural's emergence can be referred to as a policy-defined society. Because this book has divided the advantages and disadvantages of life by race and laid down the ethics of life that can be accepted by many people, especially the learned, the wealthy, the upper class people and the farmers. Following this, we can count the number of moral books that appeared in this period which highlighted the methods related to morality as socially appropriate morals, behaviors and legal systems.*

*Key words*

*Moral, ethics, especially, socially, , behaviors, appropriate, referred*

**முன்னுரை**

திருக்குறள் தோன்றிய காலத்தில் இருந்த சமூகத்தை கொள்கையால் வரையறுக்கப்பட்ட சமூகம் என குறிப்பிடலாம். ஏனெனில் இந்நூல் வாழ்வின் நன்மை ,தீமைகளை இனம் பிரித்துக் காட்டி சமூகத்தவரின் குறிப்பாக கற்றறிந்தோர், செல்வந்தர் ,உயர்குடி மக்கள், விவசாயிகள் என பலரும் ஏற்கும்படியான வாழ்க்கை நெறிமுறைகளை வகுத்து கூறியிருக்கிறது. இதனைத்தொடர்ந்து அறம் தொடர்பான வழிமுறைகளையே சமூகத் தகுதி வாய்ந்த ஒழுக்கங்களையும் நடத்தைகளாகவும் நீதிமுறைகளாகவும் எடுத்துக் கூறிய பல அறநூல்கள் இக்காலகட்டத்தில் தோன்றியதை எண்ணிப் பார்க்கலாம்.

இந்நூல்கள் முன்வைத்த ஒழுக்கவிதிகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ள தக்கனவாகவே உள்ளன. எனினும் ஒரு சில கருத்துக்கள் சமூக ஆளுமை குறித்த சிந்தனையில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. சான்றாக, நற்குடிப்பிறந்தோரது பண்பு மரபுவழியாக பட்டதாகவே இருக்கும் என்பதையும் பெண்களுக்கு இல்லத்தைத் தாண்டிச் செல்வதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டு இருப்பதையும் ஆடவரின் ஆண்மை குறித்த வரையறையில் முரண்பாடு இருப்பதையும் சூழலுக்கேற்ப நடந்துகொள்ள வலியுறுத்துவதையும், பிறப்பு, கல்வி முதலானவற்றில் காணப்படும் ஏற்றத்தழ்வுகள் சுட்டப்படுவதையும் அரசனின் அறிவாண்மையில் இருவேறு தன்மைகள் இருக்கவேண்டிய இயல்பையும் குறித்து திருவள்ளுவர் பேசும் இடங்கள் சிந்திக்கத்தக்கன. இவற்றால் மனித ஆளுமையில் சிலவேளை சமரசம் காண வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. எனவே ஒரு மனிதன் தனது ஆளுமையை நிலை நிறுத்திக் கொள்வதற்கு சூழலுக்குத் தகுந்தவாறு இறுக்கமான நிலையிலிருந்து நெகிழ்வாக்கிக் கொள்ளலாம் என்கிறார் வள்ளுவர். இதனை **' வாய்மையில் சமரசம்'** எனலாம்.

**வாய்மையில் மேன்மை**

பொய் பேசாதிருப்பது மிகச்சிறந்த அறமென்றும் சான்றோருக்கு அது அழகு என்றும் மானிடர்க்கு புகழைத் தருவது என்றும் பலவாறு விளக்கம் தருகிற வள்ளுவர் '**பொய்மையும் வாய்மை இடத்த**' என்று சூழலுக்குத் தகுந்தவாறு அதாவது நன்மை பயக்கும் வகையில் பொய் கூறலாம் என்கிறார். இக்குறளுக்கு விளக்கம் தரும் பரிமேலழகர் **"தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாத கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்மை எனவும் அவற்றது இலக்கணம் கூறப்பட்டது"**[1] என்கிறார். இதனால் நன்மை பயக்குமாறு பொய் கூறுவது தவறில்லை என்ற சமாதானம் கருத்து முன் வைக்கப்படுவதை உணரலாம்.

எந்தவொரு இக்கட்டான சூழலிலும் நன்மையே கிட்டும் தருவாயிலும் பொய்யே கூறக்கடாது என்ற நீதியை வலியுறுத்த அரிச்சந்திரன் என்கிற புராணத்தை பாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது இவன் எண்ணிப்பார்க்க வேண்டும். அத்தகையதொரு கறாரான ஆணையை வள்ளுவர் வகுக்கவில்லை. நன்மையை நிலை நிறுத்துகிற சூழலில் சிலவேளை பொய்யும் கூறவேண்டியது ஆகிறது என்பதை வாழ்க்கை நடைமுறையில் கற்றுணர்ந்து இவ்வாறான கருத்தை கூறியிருக்கிறார் எனலாம். எனவே பொய் பேசாதிருத்தல் மனித ஆளுமை மிக்கவர் என்பதில் ஐயம் இல்லை என்றாலும் அவர் நன்மையை மீட்டெடுக்க வேண்டிய இக்கட்டான கால கட்டங்களில் பொய் கூறி தமது ஆளுமையை காத்துக் கொள்ளலாம். அது தவறாகாது. இது ஆளுமையில் சமரசம் காண்கிற செயலன்றி வேறில்லை. மேலும் உண்மையையே கடைபிடித்து கொண்டிருக்க இயலாது என்றும் அது சிலவேளை நன்மையை அழிப்பதற்குக் காரணமாகிவிடும் என்றும் வள்ளுவர் கருதியிருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

**ஒன்றிலாவது சிறந்திருக்கட்டும்**

வள்ளுவர் பல இடங்களில் ஒன்றின் பண்பினை உயர்த்திக் கூறுவதற்காக பிறிதொரு பண்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. குறிப்பிட்ட பண்பு மட்டும் சிறப்பாக இருந்தால் நல்லது என்கிற கருத்து நிலைப்பாட்டில் கருத்துக்களைக் கூறியிருக்கிறார். அதனால் மனித ஆளுமையில் குறையுடைய தன்மையும் ஏற்புடைத்தாகிறது. சான்றாக புறங்கூறுதல் மிகப்பெரிய குற்றமாக எடுத்துக் கூறும் வள்ளுவர், 'அறங்கூறான் அல்லன செய்யினும்' என்று அறத்தை பற்றி என்னாது, அக்கருத்தை ஏற்காது அதற்கு மாறான செயல்களைச் செய்தாலும் புறம் கூறாமல் இருக்கிற பண்பினால் ஒருவன் பாராட்ட தகுந்தவன் என்கிறார்.

**“அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே**

**புறன்அழீஇப் பொய்த்து நகை”** *(குறள். 182)*

என்று புறங் கூறி பேசித் திரிகிற செயல் எத்தகைய தீமையானது என்பதை உணர்த்த வேண்டி அதற்கு மாறான அறத்தை அளிக்கின்ற தீமை புரிதலின் தீமையானது என்று ஒப்பிட்டு அறியுமாறு செய்து கருத்துகளுக்கு எதிரான செயலாகப் புறங்கூறலை விளக்குகிறார். மனித ஆளுமையில் இங்ஙனம் ஒரு சில குறைகளையும் பெருங்குற்றம் நிகழாதிருக்கிற வகையில் ஏற்கலாம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

நண்பர்களிடத்தில் விருப்பமற்ற செயல்களைச் செய்தாலும் பரவாயில்லை. அறிவுடையார் பலர் முன்பாக பயனில்லாத சொற்களைப் பேசுவது தீங்கானது.

**“பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல**

**நட்டார்கண் செய்தலின் தீது”** *(குறள். 192)*

அதாவது நயமாகப் பேசாவிட்டாலும் பயனில்லாமல் பேசுதல் ஆகாது என்பது வள்ளுவர் கூறும் அறிவுரையாகும். எனவே பேச்சுத் திறனில் ஒருவரது ஆளுமையின் சிறப்பு பயனில்லாமல் பேசுவதை தவிர்த்திட வேண்டும் என்பதில் இருக்கிறது. நயம் இல்லாமல் பேசினாலும் ஏற்கலாம் என்கிற சமரசமும் இதனில் இருக்கிறது குறள் வருமாறு:

**"நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்**

**பயன்இல சொல்லாமை நன்று" (குறள். 197)**

வள்ளுவர் சுவர்க்கம், வீடுபேறு அடைதல் என இருவேறு அணில் சுட்டுவது உள்ளது. அவ்விரண்டில் வீடுபேறு அடைவது மேலானது கொல்லாமை எனும் அதிகாரத்தில் உயிர்க்கொலை கூடாது என வலியுறுத்தும் வள்ளுவர்,

**"நன்றுஆகும் ஆக்கம்பெரிது எனினும் சான்றோர்க்கு**

**கொன்று ஆகும் ஆக்கம்கடை" (குறள். 328)**

என்றொரு குறளைப் படைத்துள்ளார். இக்குறளுக்கு விளக்கம் தரும் பரிமேலழகர், 'தேவர் பொருட்டு வேள்வி கண் கொன்றால் இன்பம் மிகும் செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்கு கூறப்பட்டதாயினும், துறவான் அமைந்தார்க்கு ஓர் உயிரை கொல்ல வரும் செல்வம் '**கடை**' என்கிறார். மேலும், 'இன்பம் மிகும் செல்வம் ஆவது தாமும் தேவராய் துறக்கத்துச் சென்று எய்தும் செல்வம் அது சிறிதாகலானும் பின்னும் பிடித்ததற்கு ஏதுவாகலானும் விடாகிய ஈறுஇல் இன்பம் கடை எனப்பட்டது. துறக்கம் எய்துவாருக்குக் ஆம் ஆயினும் வீடு எழுதுவதற்கு ஆகாது என்றமையின் விதிவிலக்குகள் தம்முள் மலையாமை விளக்கியவர் ஆயிற்று. இது இல்லறம் அண்மைக்கு காரணம் இவை இரண்டு பாட்டானும் கொலை குற்றம் கூறப்பட்டது"[2] என்கிறார். இக்கருத்தின் படி உயிர்க் கொலை செய்வதே குற்றம் என கருத்துரைக்கும். வள்ளுவர், வேள்விப் பயனாகச் சிலர் உயிர்க்கொலை செய்கின்றார். அதுகூட ஏற்புடையதாக இருக்கிறது. ஆனால், வீடுபேறு கருதித் தவம் செய்வார் போன்ற சான்றோர் பெருமக்கள் உயிர்க்கொலை செய்வது பெருங்குற்றம். அது கூடாது அச்செயல் அவர்களது ஆளுமைக்கு இழுக்கு என்கிறார்.

**முடிவுரை**

- மனிதன் தனது ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்வதற்கு சூழலுக்குத் தக்கவாறு குணாதிசயங்கள் மாறுபடுகின்றது.
- நன்மையை மீட்டெடுக்க வேண்டிய இக்கட்டான கால கட்டங்களிலும் பொய்கூறி ஆளுமையைக் காத்துக் கொள்ளலாம்.
- இல்லறத்தை மேற்கொண்டோர் சுவர்க்கம் செல்லக்கருதி வேள்வியில் உயிர்க்கொலை செய்யத் துணிவதை நன்று ஆகும். ஆக்கம் பெரிதெனினும் என்று கண்டிப்பற்ற நிலையில் நாட்டு நடப்பியலைக் கூறிச் சான்றோருக்கு ஆகாது என்றுமே அச்செயல் கீழானது என்றும் குறிப்பிடுகிறார்.

**அடிக்குறிப்புகள்**

1. திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், ப. 144.
2. மேலது. ப. 150.
3. **குறள். 182**
4. **குறள். 192**
5. **குறள். 197**
6. **குறள். 328**


1. *Parimelazagar,- Thirukkural*

*KAVITHA PUBLICATION, CHENNAI*

*EDITION:2022*

*2*

*KO. VISAYARAGAVAN*

*Thirukkural in Thiruvalluvar Period Script.*

*EDITION: 2018*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com